திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்திருக்கிற இந்தச் சட்டத்தின் சரத்துக்களைப்பற்றி பேசும்போது ஏற்கெனவே உள்ள சினிமாட்டோகிராப் ஆக்ட்படியும் ஏற்கனவே உள்ள சென்ட்ரல் காப்பி ரைட் சட்டத்தின் அடிப்படையிலேயும்தான் கொண்டுவந்திருக்கிறோம்; ஆகவே, இதை விமர்சிக்க வேண்டாமென்று சொன்னார்கள். துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். யார் கொண்டு வந்திருந்தாலும், எநத நடைமுறையில் இருந்தாலும் அரசாங்கம் மூலச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவருவதின் நோக்கம் என்ன? மூலச் சட்டத்தில் குறைபாடு இருக்கிறது. தவறு இருக்கிறது என்பதினால்தானே திருத்தம் கொண்டுவருகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான் கான் அவர்கள் நாளை தொடர்ந்து பேசுவார்கள். பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

[பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது]

(பிற்பகல் 4-00)

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

1984 பிப்ரவரி 22]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. ஒழுங்குப் பிரச்சினை.

சட்ட முன்வடிவுகளின் படிவங்களை உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே அளித்தல்.

திரு. ரா. உமாநாத் : ஒரு ஸீரியஸ் பாயின்ட் ஆப் ஆர்டர். பில்களை எல்லாம் இன்ட்ரொட்யூஸ் செய்வதற்கு முன்னால் அவற்றை சர்குலேட் செய்யவேண்டும் என்பது ஸ்டாச்சூட்டரி நெஸஸிட்டி, அப்படி சர்குலேட் பண்ணியதாகத் தெரியவில்லை. எப்போது பண்ணப்பட்டது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டேபிளில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்போது இருக்கிறது. இதை முன்னால் ஏன் சர்குலேட் செய்யவில்லை?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய அட்வான்டேஜ்க்காகச் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அப்படி என்ன அவசரம்? நாளைக்கே செய்திருக்கலாமே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் ஒன்றும் முறைகேடு இல்லை.

திரு. ரா. உமாநாத் : மத்தியானம் டேபிளில் வைத்துவிட்டு உடனே இப்போது இன்ட்ரொட்யூஸ் செய்தால் என்ன அர்த்தம்? சட்டப்படி முன்கூட்டியே சர்குலேட் செய்யவேண்டியது ஸ்டாச்சூட்டரி ரிக்வயர்மென்ட்.